முருகப்பெருமான் துணை

**மகான் அமர்நீதி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.04.2024**, வெள்ளிக்கிழமை

1. மக்கள்படைகள் தன்னை
மாதவசிகளாக மாற்றம் தர
ஆக்கமுடன் உயர் ஞானமருளி
அவதாரம் புரிந்த அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அறிவிப்பேன் துல்லிய ஆசி
வரங்களாய் குரோதி தகர் திங்கள்
வல்லமைபட முன்னான்கோர்திகதி புகர் வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 13 ம் நாள், 26.04.2024, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் அமர்நீதி நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
பாரதமெங்கும் அரங்க மகானின்
படைகளாக தொண்டர் கூட்டம்
4. கூட்டம் பெருகி வருதலுற
குருவரங்கனாக ஆறுமுகன்
சட்டமாக வேதம் பல இயற்றி
சன்மார்க்க வழி மக்கள்வர
5. மக்கள் வர அருளி வர
மரணம் வென்று மீளவே
தேக்கமின்றி கலியுக மக்கள்
தேசிகனை தொடர்ந்துவர
6. வருங்காலம் அஞ்ஞானம் விலகி
வதையாகிய பசி பிணி விலகி
தருங்குணம் நிறைந்தச் சூழலாக
தருமவான்கள் நிரம்பிய வண்ணம்
7. வண்ணமுடன் ஞான சமூகமாக
வரலாறு படைக்கும் தலைமை
மண்ணுலகம் அடையும் படியே
மகத்துவம் தன்னை படைப்பர்

8. படைக்கவே பாரதம் தொட்டு
பாருலகம் எங்கிலும் பரவி
தடைகள் பலவும் கடந்து
தரணி பாதுகாப்பை அடையும்

9. அடையுமே அரங்கன் விருப்பமாக
அவதார அரங்கன் நோக்கமாக
தடைகள் வென்று தனிப்பெரும்
தலைமை வேலவன் அம்சமாக

10. ஆகவே உலகம் கண்டடைந்து
அற்புதமான ஞான ஆட்சி
செகமெல்லாம் கண்டுச் சிறந்து
சிந்தை மகிழ மக்கள் ஆதரவு

11. ஆதரவு பெருகி உலகெல்லாம்
அரங்கன் வழி நடப்பவர்க்கே
ஆதரவு கிட்டி செல்வாக்காகி
ஆளுமை ஞானத்தலைமை காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–